# 09-04-2024 செய்தி

## சட்ட நடவடிக்கையிலிருந்து தப்பிக்க முன்ஜாமீன்கள் வழிவகுக்கக் கூடாது!

- 'பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளில் சிக்கியிருப்பவர்களுக்கு முன்ஜாமீன் வழங்குவது நீதி வழுவுதலுக்குச் சமம்' என்றும் கண்டிப்பான தொனியில் கூறியிருக்கிறது.

- 2020 பிப்ரவரியில், பிஹாரின் கிழக்கு சம்பாரண் மாவட்டத்தின் ஜுஹ்லி கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைச் சூனியக்காரர் எனப் பழிசுமத்தி, கடுமையாகத் தாக்கியதாகவும் ஆடையைக் கிழித்து, மனிதக் கழிவுகளை உட்கொள்ளச் செய்து அவமானப்படுத்தியதாகவும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிலர் மீது குற்றம்சாட்டப்பட்டது.

- சக மனிதர்களைச் சூனியக்காரர்கள் என முத்திரை குத்திக் கொடுமைப்படுத்துதலுக்கு எதிரான சட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

- இதையடுத்து, தாங்கள் கைதுசெய்யப்படுவதிலிருந்து தப்புவதற்காக, முன்ஜாமீன் கேட்டு பாட்னா உயர் நீதிமன்றத்தை அவர்கள் அணுகினர்; நீதிமன்றம் அதை ஏற்கவில்லை.

- முன்ஜாமீன் என்பது அசாதாரணமானது, கேட்கும் அனைவருக்கும் முன்ஜாமீன் வழங்க முடியாது என்று உறுதியாகத் தெரிவித்திருக்கிறது. "பல வழக்குகளில் பிணை வழங்கப்படுவது ஒரு விதி என்று கூறப்பட்டாலும்,

- முன்ஜாமீன் வழங்கப்படுவது விதியாக இருக்க முடியாது" என்று கூறியிருக்கும் நீதிபதிகள், "கடுமையான குற்ற வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு இடைக்காலப் பாதுகாப்பு வழங்குவது நீதி வழுவவும், சில வேளைகளில் சாட்சியங்களைச் சிதைக்க அல்லது திசை திருப்பவும் வழிவகுக்கும்; விசாரணை பெரிய அளவில் பாதிக்கப்படக்கூடும் என்பதால், இதுபோன்ற வழக்குகளில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்ற நீதிமன்றங்களுக்கும் அறிவுறுத்தியிருக்கின்றனர்.